தித்திக்கும் திருமறையே!

முகவை

முஹம்மது ஆதம்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்

இஸ்லாமிய பெருமக்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

சிறப்பு மிக்க ரமலானின் ஒரு நாள், திருமறையைப் பற்றி எழுத வேண்டும் என்ற ஒரு திடீர் உதிப்பு. வற்றாச் சமுத்திரமாம் அந்த வான்மறை பற்றி எழுத நமக்கு என்ன தகுதியிருக்கிறது என்ற பதைப்பு மறுபக்கம். எவரை வைத்தும் எவ்வளவு பெரிய காரியத்தையும் முடிக்கவல்ல அல்லாஹ்வின் பேராற்றலில் நம்பிக்கை கொண்டதில் ஒரு மலர்ச்சி. எழுதத் தொடங்கினேன். அல்லாஹ்வின் பெருங்கருணையால் **தித்திக்கும் திருமறையே !** உங்களின் கைகளில் தவழுகிறது. குற்றங்களைந்து குணங்கொள்ள வேண்டுகிறேன்.

இதன் முதற் பதிப்பை, இராமநாதபுரம் ஜரீனா முஹைதீன் டிரஸ்ட் மூலமாக அச்சிட்டு இலவசமாக வினியோகம் செய்ய உதவிய என் அன்பு நண்பரும், முன்னாள் வக்ஃபு வாரிய உறுப்பினருமான **ஹாஜி A. அன்வர்தீன்** அவர்களுக்கும், இவ்விரண்டாம் பதிப்பை அச்சிட்டு, இலவசமாகத் தர மனமுவந்து வந்துள்ள, என் உடன்பிறந்த சகோதரர் **மர்ஹூம் M. செய்யது இப்ராஹீம் அம்பலம்** அவர்களின் புதல்வரும், வெளிப்பட்டணம் ஜாஹிர் பேன்ஸி ஸ்டோரின் உரிமையாளருமான **M.S. உஸ்மான் அலி** அவர்களுக்கும், என் உளங்கனியும் நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். இதுபோன்ற பல நல்ல காரியங்களை தீனுக்காக அதிகமாகச் செய்வதற்குரிய நிறைந்த செல்வத்தையும், நோயற்ற நீண்ட வாழ்வையும் அல்லாஹுத தஆலா அவர்களுக்குத் தந்தருள்வானாகவும். ஆமீன். வஸ்ஸலாம்.

23, ராஜேந்திரர் 3-வது தெரு,
மதுரை - 625 016.
போன் : 608634

அன்பன்
முகவை முஹம்மது ஆதம்
18-9-2000

இந்நூலை யாரும் அச்சிட்டு இனாமாக வினியோகம் செய்து கொள்ளலாம்.

1

மகிழ்வுடை வாழ்வளித்து
மானிடரைக் காப்பதற்கு
மறைதந்த இறைவனுக்கே
மாபெரிய புகழனைத்தும்.

2

அண்ணல்நபி யவர்களுக்கும்
அவர்தோழ ருறவினர்கள்
மும்மின்கட்கும் இறையருளும்
மாரியெனப் பொழிந்திடுக.

3

தித்திக்குந் திருமறையே
தெவிட்டாத தெள்ளமுதே
தெளிவான திடமுடைய
திறன்கொண்ட தீன்மறையே !

4

அளவற்ற அருளுடையோன்
அன்புடையோன் நிகரேயில்லா
அல்லாஹ்வின் கருணையினால்
அவனிவந்த அருமறையே !

5

நாடுமொழி இனமென்றில்லா
நானிலத்தோ ரனைவருக்கும்
நல்வாழ்வு தந்தருளும்
நன்மறையா மெம்மறையே !

6

வாழ்வாங்கு வாழ்வதற்கு
வள்ளல்திரு நபிவழியாய்
வல்லோன் வழங்கியருள்
வான்புகழும் எம்மறையே !

7

தெவிட்டா திருந்திடவே
தெளிவான அரபியிலே
அச்சமூட்டி எச்சரிக்க
அவனிவந்த அருமறையே !

8

"லைலத்துல் கத்ரிரவில்"
"ஹிராக்" குகைதனிலே
சீராக உதித்தனையே
சீர்மிகும் செம்மறையே !

9

இருபத்து மூன்றாண்டு
இறங்கிட்ட "வஹி"களோடு
பூரணமாய் பொழிவுடனே
பூத்திட்ட புர்கானே !

10

ஆறாயிரத் தறுநூற்றி
அறுபத்தாறு) வசனமுடை
"சூரா" நூற்றுப் பதினான்காகச்
சூட்டப்பட்டத் திருமறையே !

11

மாண்புள்ளோ ரோதுதற்கு
"மன்ஸில்"கள் ஏழும்மாகி
வாரத்தில் முடிப்பதற்கு
வாகாகுந் திருமறையே !

12

மற்றவரு மோதிவொரு
மாதத்தில் முடிப்பதற்கு
முப்பது பாகமதாய்
முத்தொளிரும் முழுமறையே !

13

முன்னளித்த மும்மறையை
முற்றிலுமா யுள்ளடக்கி
எம்மறைக்கும் நன்மறையாய்
எழில்பெற்ற எம்மறையே !

14

உத்தமராய் உயர்ந்தவராய்
உலகமக்கள் வாழ்ந்திடவே
அகிலத்தின் அதிபதியால்
அருளிவந்த அருமறையே !

15

எந்தநா டானாலும்
எக்கால மானாலும்
ஏற்கும் திறனுடைய
எழிலார்ந்த எம்மறையே !

16

அறிவொளி நீயல்லவோ
அருவழியும் நீயலவோ
மறைவான தையேற்க
மதிசொல்லு மாமறையே !

17

புகழுக்கு உரியவனைப்
புகழ்ந்தேத்தித் தம்குறையைப்
பின்வைக்கும் பேணுதலைப்
பிறப்பித்தா யெம்மறையே !

18

தொழுகை தனைப்பேணி
தம்பொருளில் தானமிட்டு
மறுமையை யேற்பவன்தான்
மறைவழியோ னெனுமறையே !

19

ஆலமெல் லாம்படைத்த
ஆற்றலெலா முள்ளவனுக்(கு)
இணைவைக்கு மிழிசெயலை
இறைவெறுப்பா னெனுமறையே !

20

தூய்மைத் துணைவர்களும்
தூடர்சுகமும் சுவனமதில்
விசுவாசிக் குண்டெனவே
விளம்புகின்ற விண்மறையே !

21

பிறப்பித்து இறக்கவைத்து
பின்னெழுப்பி விசாரணைசெய்(து)
அதற்குரிய தந்திடுவோன்
அல்லாஹ்வே யெனுமறையே !

22

கஷ்டத்தில் நஷ்டத்திலும்
கலங்காத பொறுமையுடன்
தொழுதுத் "துஆ" கேட்கத்
துயர்நீங்கு மெனுமறையே !

23

ஆகாயம் பூமியிலும்
ஆட்சிசெயு மவனல்லால்
ஆருளார் உதவுதற்கு
அறைந்திட்ட அருமறையே !

24

வித்தகர்க ளெவர்களேனும்
வேதத்திற் கொப்பான
வசனந்தரத் தகுமோவென
விளித்தாயே விண்மறையே !

25

அனைத்துப் படைப்பினிற்கும்
அல்லாஹ்வே உதவுபவன்
அவன்தானே காவலெனை
அறைந்தாயே அருமறையே!

26

இம்மையின் தொழுகையதும்
இனிதளித்த "ஜக்காத்"தும்
மறுமையில் மகிழ்வுதரும்
மாண்புடைய தெனுமறையே!

27

"மஸ்ஜிதா" மிறையில்லத்தில்
மறையோனைத் துதிப்பதனைத்
தடுப்பவனே மாபெரிய
துஷ்டனென் றறைமறையே!

28

உலகிலு முச்சியிலும்
உள்ளவைக் குரியவனும்
சந்ததிக ளேதுமில்லா
சக்தனவ னெனுமறையே!

29

அச்சமூட்டி எச்சரிக்கும்
அஹ்மதர்க் கெதிரானோர்
பாவிகள் என்பதனைப்
பகர்ந்தாயே பண்மறையே!

30

பரிகாரம் ஏதுமேற்கா
பரிந்துரையும் பயனளிக்கா
அந்நாளைப் பயந்திடவே
அறிவுறுத்தும் அருமறையே!

31

நிராகரிப் போர்தமக்கும்
நலமுண்டு உணவுமுண்டு
செல்லுவதோ நரகமெனச்
செப்பிடுந் திருமறையே !

32

சோதனைகள் வந்திடினும்
சோராது இறைநாடின்
கருணையோ டாசியுள
கலங்காதீ ரெனுமறையே !

33

பொறுமையுடன் தொழுகையையும்
பேணிப் பெரியோனை
நம்புகின்ற பேர்க்குதவி
நிச்சயமா மெனுமறையே !

34

வல்லோன் வழியினிலே
வாழ்வதுவு முடிந்தவர்கள்
செத்தாரோ வாழ்பவரே
செப்புகின்ற செழுமறையே !

35

மறையோனை மறுமைதனை
மலக்குகள் வேதங்களை
நபிகளையு மேற்பவரே
நல்லோர்க ளெனுமறையே !

36

வம்சத்தா ரநாதைகள்
வறியோர் வழிப்போக்கர்
அடிமைக்கு முதவுபவர்
ஆன்றோரா மெனுமறையே !

37

தந்திட்ட வாக்குறுதி
தவறாது நிறைவேற்றி
நஷ்டத்தில் பொறுமையுளார்
நன்மக்க ளெனுமறையே !

38

இரத்தப் பிணைப்புள்ள
இனத்தோ ரெலாமகிழ
சொத்துக்கள் பிரித்திடவே
சொல்கின்ற செம்மறையே !

39

பரிகார மிருந்திடினும்
பயனளிக்கும் நோன்பதனை
நோற்பதுவே நன்மையென
நுவலுகின்ற நுண்மறையே !

40

கூப்பிட்டக் குரலுக்குக்
குறைகேட்க அருகிருக்கும்
குணாளனைப் பிரார்த்தித்துக்
குணம்பெறக் கூர்மறையே !

41

தூராக்கி சைத்தானை
தூய்தான இஸ்லாத்தில்
பூரணமாய்ப் புகுந்துவிடப்
புத்திசொலும் புர்கானே !

42

தெளிவான அத்தாட்சி
தெரிந்தும் நழுவோர்க்கு
தண்டனைக ளுண்டெனவே
தெண்டிக்கும் திருமறையே !

43

பயனைவிடப் பாவமது
பலம்பெற்றா லச்செயலை
நீக்குவது கடமையென
நிர்ணயித்த நன்மறையே !

44

ஆதரவு அற்றவர்க்கு
அனுதாபத் துடனீதம்
புரிந்திடவே வேண்டுமெனப்
போதிக்குந் திருமறையே !

45

விதவைக்கு வாழ்வளிக்க
விதியாக்கி மறுமணத்தை
இருபாலர் உரிமையினை
இருத்திட்ட எம்மறையே !

46

கட்டியவள் கணவனுக்கும்
கணவன் மனைவியர்க்கும்
ஆடையாம் என்பதனை
அறிவுறுத்தும் அருமறையே !

47

முற்றிலுமாய் முன்னவனை
முற்படுத்தி நன்மையுஞ்செய்
நல்லோர்க்கு நலமேயுண்டு
நவின்றிட்ட நன்மறையே !

48

ஆதம் (அலை) யவர்களுக்கு
அடிபணியா இப்லீசவன்
வலையில் விழாதிருக்க
வலியுறுத்துந் திருமறையே !

49

ஹக்கனை நம்பினவர்க்(கு)
கைசேத மில்லையென
நானில வரலாற்றினை
நவின்றிட்ட நன்மறையே !

50

சைத்தானைச் சாய்த்திட்ட
சன்மார்க்க விசுவாசி
பலமான கயிறதனைப்
பற்றிட்டா னெனுமறையே !

51

இறையருளை நாடினராய்
இன்பொருளை யுறுதியுடன்
செலவிடுவோர் பலனுடையோர்
செப்பிடுஞ் செம்மறையே !

52

நல்லதுவை விரும்புவதை
நன்மனத் தோடூதல்
நன்மக்கட் கழகனவே
நவின்றிட்ட நன்மறையே !

53

தர்மஞ்செய் வோர்களுக்குத்
தனியோனின் மன்னிப்பும்
சம்பத்தும் உண்டெனவே
சாற்றுகின்ற செம்மறையே !

54

மறைவாக வறியோர்கட்கு
மனதாரச் செய்தானம்
பாவங்கள் போக்கிநல்ல
பயன்தரு மெனுமறையே !

55

பிறரறியச் செய்தானம்
பிறர்தானஞ் செய்வதற்கு
ஏதாகு மென்றானால்
ஏதமில்லை யெனுமறையே !

56

வணிகத்தை யாகுமாக்கி
வட்டியது பெற்றிடுவோர்
நரகத்தின் வாசியென
நவின்றாயே நன்மறையே !

57

கடனாளி கலங்கிடாமல்
கடனடைக்கக் காத்திடவும்
தர்மமென விட்டிடுதல்
தரும்நன்மை யெனுமறையே !

58

நித்திய ஜீவனுமாய்
நிலையான வனுமவனாம்
வணக்கத்திற் குரியொருவன்
வல்லோனே யெனுமறையே !

59

பெண்பொன்னு மக்களையும்
பற்றுகொள லழகெனினும்
நிலையான தங்குமிடம்
நித்தனிட மெனுமறையே !

60

அரசாள அனுமதியும்
அகற்றுதலும் கண்ணியமும்
இழிவைத் தருபவனும்
இறைவன்தா னெனுமறையே !

61

அடியானின் தவறுகளை
அம்பலப் படுத்துவதும்
மறைப்பதுவும் மறையோனின்
மாண்பென்றா மெம்மறையே!

62

அல்லாஹ்வை நேசிப்போர்கள்
அண்ணல்வழி பற்றினாக்கால்
அவன்நேச மன்னிப்பும்
அவர்க்குண்டா மெனுமறையே!

63

வாக்குறுதி சத்தியத்தை
வாகோடு காத்திடுவோர்
பெரியோனின் நேசமதைப்
பெற்றிட்டோ ரெனுமறையே!

64

நலவின்பால் நத்திடவும்
நல்லதல்லா தடுத்திடவும்
தூண்டுதற் கொருகூட்டம்
தொடரச்சொல் தொன்மறையே!

65

வானத்து மலக்குகளால்
வையம்புகழ் "பத்ரு" வெற்றி
வழங்கியோனை நன்றியுடன்
வழிபடச்சொல் வான்மறையே!

66

"மஹர்"தந்து கண்ணியமாய்
மணமுடித்து மனைவியரை
நீதமுடன் நடத்துதலே
நேர்மையென் றறைமறையே!

67

வாய்த்திட்டா லிறையுதவி
        வெற்றிபெறா ரெவருமுண்டோ
விட்டுவிட்டா லுதவிசெய்ய
        வேறுளரோ விளிமறையே !

68

உண்மைவிசு வாசிகளை
        உய்த்தறியு மிறைவிதியே
"உஹது"ப்போர் நஷ்டமென
        உணர்த்திட்டா யெம்மறையே !

69

அனாதைக ளின்பொருளை
        அநியாயமாய் விழுங்கிடாமல்
தகுதியவர் பெற்றதுவுந்
        தந்துவிடச் சொல்மறையே !

70

இம்மையிலும் மறுமையிலும்
        இன்பமதாய் வாழ்ந்திடவே
நீசொல்லு மறிவுரைக்கு
        நிகருண்டோ நிறைமறையே !

71

விஞ்ஞான வித்தகரும்
        விண்வெளிச் சென்றோரும்
படித்தறிந்தா ருன்கருவை
        பயன்பெற்றார் எம்மறையே !

72

இணைவைப்போர் நிச்சயமாய்
        இறைவனின் மன்னிப்பிற்கு
அருகதை யற்றவரென்(று)
        அறிவிக்கும் அருமறையே !

73

இணைவைப்ப தல்லாத
இதரேதும் பாவங்களை
நாடியோர்க்(கு) மன்னிப்பவன்
நாயனென நவில்மறையே !

74

அமானிதங் காத்திடலும்
அருந்தீர்ப்பில் நீதமதும்
விசுவாசிக் குரிசெயலாம்
விண்டிட்ட விண்மறையே !

75

மணமுடிக்கப் போர்புரிய
மாண்போடு அரசாளவும்
மகிழ்வோடு வாழ்வதற்கும்
மதிசொல்லும் மாமறையே !

76

தாட்சணியம் குரோதத்தினால்
தவறாகச் சாட்சிசொலல்
தவிர்த்திடலுங் கூடாதென
தர்மநீதி சொல்மறையே !

77

பாவம்விட்டு சீர்திருந்தி
படைத்தவனை யுறுதியுடன்
பற்றிவழி பேணுபவர்
வெற்றியாள ரெனுமறையே !

78

பயபக்தி நன்மைகட்கும்
பக்கநின்று கொடுஞ்செயலுக்
குதவாது விலகிடுவோர்
குணசீல ரெனுமறையே !

79

பசியினது கொடுமையினால்
புசித்திடினும் விலக்கியுள
மனம்பார்க்கும் இறையதனை
மன்னிப்பா னெனுமறையே !

80

துன்பந் தொடர்கின்ற
தர்மத்தி லும்மேலாம்
இன்சொல்லும் மன்னிப்பும்
இயம்பிட்ட இன்மறையே !

81

உண்மையோ டிறையைநம்பி
உயர்செயலைச் செய்வோர்குற்றம்
பொறுத்தருளி பெரும்பயனைப்
பொழிந்திடுவா னெனுமறையே !

82

தீதுசெய்யி னுடன்வருந்தி
திருந்தியிறை மன்னிப்பினைக்
கோருவோர்க்கு இறைகருணை
கிட்டுமென்றா யெம்மறையே !

83

குடிப்பதுவுஞ் சூதாட்டமும்
குறிபார்த்தல் குரோதமுடன்
விரோதித்தலு "மிப்லீஸ"வன்
வழிகேடென் றறைமறையே !

84

தவறுகளைப் பொறுத்தருளுந்
தகைமையுளத் தயாளனவன்
தண்டிப்பிலுங் கடுமையுள்ளான்
தெண்டித்தாயே தீன்மறையே !

85

வானங்கள் பூமியிலும்
வணக்கத்திற் குரியவனாம்
அணுவசைவும் அவனறிவான்
அறிவுறுத்தும் அருமறையே !

86

அல்லாஹ்தரும் நலன்களையும்
அவன்கொடுக்குந் தீங்கினையும்
ஆற்றலுள்ளோ னவனேயல்லால்
அகற்றெவரோ அறைமறையே !

87

எத்துறை யாயிடினும்
அத்துறைக்குத் தேவையுள்ள
இல்லையென்று இல்லாமல்
ஈந்துவக்கு மிறைமறையே !

88

வணக்கமுந் தியாகமதும்
வாழ்வதுஞ் சாவதுவும்
உலகாளும் இறைவனுக்கு
உரித்தென்றா யெம்மறையே !

89

பெருமையோ டிறுமாப்பும்
பெற்றியாய்க் கொண்டவர்கள்
சிறுமையுற்று சீரழிவர்
செப்புகின்ற செம்மறையே !

90

ஆடைகொண் டலங்கரித்து
ஆகுமான துண்டிடலும்
அளவில்லா வீண்செலவை
அகற்றிவிடச் சொல்மறையே !

91

மானக்கேட்டு செயல்களையும்
மற்றுயாவும் நியாயமில்லா
கொடுஞ்செயலு மாகாதென்று
கூறுகின்ற குர்ஆனே !

92

மறைவாக்கு பொய்யெனவும்
மறுமையின் சந்திப்பினை
நம்பாதோர் நற்கருமம்
நாசமாகு மெனுமறையே !

93

வரண்டபூமி பிளந்துஅதில்
விலைதலைத் தந்திடுவோன்
மரித்தவரை வெளிப்படுத்த
மாட்டானோ கேள்மறையே !

94

காலையில் மாலையிலும்
ஹக்கனைத் துதியுஞ்செய்து
மறையோதல் செவிசாய்த்தல்
மாண்பென்ற மாமறையே !

95

இறைநாமங் கேட்டுஅஞ்சி
மறைமதித்து தானமிட்டு
தொழுகைபேணி நடப்பவர்கள்
தொய்வுறா ரெனுமறையே !

96

அல்லாஹ்வழி செல்பவரை
அகற்றிடச் செலவிடுவோர்
நாசமுற்று மறுமையிலே
நரகஞ்செல்வா ரெனுமறையே !

97

பொருளுட லுயிர்துறந்து
போரிடுவர்க் குதவியவர்
நட்பிலிவர் நெருங்கியவர்
நவில்கின்ற நன்மறையே !

98

அல்லாஹ்வன்றி மற்றெவர்க்கும்
அஞ்சாதோரே நேர்வழியோர்
இறையில்லம் நிர்வகிக்க
இவர்தகுதி யெனுமறையே !

99

இறையளிப்ப திருப்தியுடன்
இனிகிடைக்கு மெனப்பொருத்து
வாழ்வோர்நல் விசுவாசியாம்
வலியுறுத்தும் வான்மறையே !

100

தானஞ்செய் தகைமையரைத்
தாக்கிடுவோர் தீவழியோர்
அவருக்கில்லை மன்னிப்பென
அறிவுறுத்தும் அருமறையே !

101

இறைவனைப் பணிபவரும்
இறைவரம்பு பேணுபவர்
இன்னாசெய்தல் தவிர்த்திடுவோர்
இறையடியா ரெனுமறையே !

102

இறைபுகழ்வர் நோன்பிருப்போர்
இருக்குமில்மை எடுத்துரைக்க
இடமிட்டிட மேகுபவர்
இறைநேச ரெனுமறையே !

103

இறைதரு முபதேசங்கள்
இதயநோயைப் போக்கிவிடும்
நேர்வழியைக் காட்டிவிடும்
நோக்கென்றா யெம்மறையே!

104

தவறுசெய் மனிதர்களைத்
தண்டிக்காமல் தாமதித்தல்
தயாளனான அவன்கருணைத்
தன்மையென்றா யெம்மறையே!

105

இறைநாடிய "இஸ்ராயீலர்"
இதமாய்கடல் கடந்திடவும்
"பிர்அவ்னா"ட்கள் மூழ்கியதும்
படைத்தோனருள் பகர்மறையே!

106

உலகஜீவன் யாவினுக்கும்
உணவளிக்கும் பொறுப்பையேற்று
இருக்கும்மிடியு மிடங்களையும்
இறையறிவா னெனுமறையே!

107

அச்சமூட்டி எச்சரிக்க
அருமைநபி களையனுப்பி
அகிலம்யாவும் நிர்வகிப்போன்
அல்லாஹ்வென அறைமறையே!

108

இம்மைநல் அமல்களுக்கு
இங்குபலன் வேண்டிடுவோர்
மறுமையின் நற்சுகிப்பை
மறந்திட்டோ ரெனுமறையே!

109

அக்ரமர்கள் வெள்ளத்தினால்
அழிந்து"நூஹு" நபிவழியோர்
பாதுகாக்கப் பட்டதுவும்
படைத்தோனருள் பகர்மறையே!

110

அளவுநிறை குறைத்திடுவோர்
அருளிழந்து நிச்சயமாய்
வேதனையோ டுழன்றிடுவார்
விண்டிட்ட விண்மறையே!

111

கிணற்றெறிந்த பிள்ளை"யூஸுப்"
கிளம்பிநாட்டி னதிபதியாய்
புகழடையச் செய்தஅல்லாஹ்
புகழ்க்குரியோ னெனுமறையே!

112

பிடிப்பில்லா வானம்மேலும்
பர்வதம்ஆறு மரங்கள்கீழும்
இரவினால் பகலைமூடல்
இறையாற்ற லெனுமறையே!

113

சூலாகச் சுருங்கிடலும்
வெளியாக விரிந்திடலும்
இன்னனேரம் ஆணாபெண்ணா
இறையறிவா னறைமறையே!

114

மறைத்துமென் னேரத்திலும்
மனிதர்செயுஞ் செயலெவையும்
இறையறிவா னென்பதனை
இயம்பிட்ட இறைமறையே!

115

இறைநாடித் தொழுகைவிடா
இன்னலேற்று நல்வழியில்
செலவுஞ்செய்து தீதவிர்ப்போர்
சுவனவாசி யெனுமறையே !

116

நாட்டுமக்க ளனைவருமே
நாயனுக்கெதிர் செய்திடினும்
புகழுடையோன் தேவையற்றோன்
பாதிப்படையான் பகர்மறையே !

117

புவிக்கெம்மைத் திருப்பிடுக
புனிதவழி நடந்திடுவோம்
ஏமாந்தோரின் கோரிக்கைகள்
ஏற்கப்படா தெனுமறையே !

118

“ஆகு”என்றா லாகிவிடும்
ஆற்றலுடை அல்லாஹ்வின்
அருட்கொடை மானுடர்க்கே
அறியச்சொல் அருமறையே !

119

பெற்றோர்க்கு கீழ்படிந்து
பேணியவர் சொல்மதித்து
நிந்திக்காது அன்புடனே
நிற்கக்கூறும் நிறைமறையே !

120

ஆருதவி தேவையில்லா
ஆட்சிக்கூட்டு யாருமில்லா
சந்ததிகள் இல்லாஅல்லாஹ்
சர்வசக்த னெனுமறையே !

121

மானிடரைச் சோதித்திட
மண்டலத்தை யலங்கரித்தான்
மூழ்கிடாததில் தப்பியோரே
மூமினென்றாய் முழுமறையே !

122

உயிர்விட்டுப் போனபின்பு
உலகில்செய் நல்லதன்றி
உரியபொருள் பிள்ளைசுற்றம்
உதவாதென உரைமறையே !

123

பூமிவெறும் வெளியதாகி
புதைந்தோரெலாம் விடாதெழுப்பி
பாவபுண்யப் பதிவினேட்டைப்
பார்க்கத்தருவான் பகர்மறையே !

124

ஓரிறைவ னெனவேநம்பி
ஓர்மையுடன் வேண்டுதலும்
நன்மைசெய்து இணையும்வையார்
நலம்பெறுவர் நவில்மறையே !

125

நாளையாகு மெனவேசொல்லல்
நாயனைமற செயலாகும்மே
"இன்ஷா அல்லாஹ்" என்றிடுவோர்
இறையடியா ரெனுமறையே !

126

நபி"இப்ரா ஹீமை"க்கொல்ல
"நம்ரூத்"ஆக்கிய தீக்குண்டத்தை
மலர்படுக்கை யாக்கிக்காத்த
மறையோனாற்ற லறைமறையே !

127

பெருங்கொடிய நோயிருந்தும்
பொறுமையுடன் வணங்கிவந்த
"அய்யூப்" நபிக்கு வாழ்வளித்த
அல்லாஹ்மகிமை யறைமறையே !

128

மாற்றஞ்செய் "யூனுஸ்"நபி
மீனால்விழுங்கப் பட்டதுவும்
மன்னித்துப்பின் வாழ்வளித்த
மறையோனரு ளறைமறையே !

129

மறுமைநாள் அதிர்ச்சியிலே
மடிக்குழந்தை மறந்துவிடும்
சிதைந்துவிடும் கர்பச்சிசும்
சித்தமிழப்பா ரெனுமறையே !

130

வீன்காரி யங்கள்நீக்கி
விபச்சாரம் விட்டொழித்து
சொன்னசொல்லில் நின்றிடவுஞ்
சொல்கின்ற செம்மறையே !

131

உள்ளச்சமோ டுரிநேரத்தில்
உறுதியாகத் தொழுதுஜக்காத்
அளிப்பவரே வெற்றியாளர்
அறிவுறுத்தும் அருமறையே !

132

களிச்சத்தைத் தாதாக்கிப்பின்
கட்டிரத்த நரம்பெலும்பாய்
உருத்தந்த அல்லாஹ்அவன்
உயர்வுடையோ னெனுமறையே !

133

கற்புடை மங்கையரைக்
களங்கங்கூறுங் கயவர்மீது
இறையவனின் கோபமுண்டும்
இயம்புகின்ற இறைமறையே !

134

மானுடரின் கால்கைநாவும்
மறுமைநாளில் அவர்க்கெதிராய்
செய்தவினை சாட்சிசொல்லும்
செப்புகின்ற செம்மறையே !

135

சலாங்கூறி பதிலைப்பெற்று
சம்மதத்தோ(டு) பிறர்மனைக்குள்
நுழைவதுவே நேர்மையென
நுவல்கின்ற நுண்மறையே !

136

பார்வைகீழ் நடந்திடலும்
பாரில்கற்பைக் காத்திடலும்
பாவையர் மனுசனுக்கும்
பண்பென்றா யெம்மறையே !

137

அடக்கம் பணிவுமுள்ளார்
அறிவிலியோ(டு) வாதிடாதோர்
இணைவையார் தொழுகைவிடார்
இறைநேச ரெனுமறையே !

138

ஆற்றிலிட்ட பிள்ளை"மூஸா"
அரசகுடும்ப மடைந்ததுவும்
தாயைச்செவிலி யாக்கித்தந்த
தனியோன்மகிமை தருமறையே !

139

உறங்குதற் கிரவையாக்கி
உழைப்பதற்குப் பகலைத்தந்த
நாயனுக்கு நன்றிசொல்ல
நவில்கின்ற நன்மறையே !

140

இடக்கைப் பெருமைகளை
இப்புவியில் விரும்பிடாதோர்
பேறுபெற்ற மறுமைவீட்டைப்
பெற்றிடுவோ ரெனுமறையே !

141

வணக்கத்திற் குரியொருவன்
வல்லமையெல் லாமுடையோன்
என்றுமழி வில்லாதவன்
எம்மிறைவ னெனுமறையே !

142

அல்லாஹ்வை மனதிருத்தி
அவனளித்த மறையுமோதி
வணங்கிடுவோர் பாவஞ்செய்யா
விலகிடுவோ ரெனுமறையே !

143

மண்ணில வாழ்வுவெறும்
மாயையதே நிலையுளது
மறுமைவீடென் றுறுதியுள்ளார்
மறைவழியோ ரெனுமறையே !

144

மறுமைதான் மேலானதும்
மாற்றமிலா நிலையுடைய
வாழ்க்கையிறை யடியார்க்கென்று
வலியுறுத்தும் வான்மறையே !

145

கலஞ்செலுத்த கடல்நதியும்
கடுகிச்செல்ல விண்வெளியும்
நடமாடத் தரையுந்தந்த
நாயனருள் நவில்மறையே !

146

எழுதியோதி அறியாவுள்ள
ஏந்தல்நபி மூலம்வந்த
அல்குர்ஆனை நிராகரிப்போர்
அறிவிலியென் றறைமறையே !

147

தொழுகைபேணி ஜக்காத்திட்டு
திடமுடனே மறுமைநம்பி
வாழ்வோர்சித்தி யடைந்தோரென
வாழ்த்துகின்ற வான்மறையே !

148

இறைவழிச் செல்வதற்கு
இன்முயற்சி செய்வோருடன்
இறையிருந்து நேர்வழியில்
இயக்கிடுவா னெனுமறையே !

149

அண்டமும் வானங்களும்
அதற்கிடை யுள்ளவையுந்
தவணைமுடிந் தகர்ந்துவிடும்
தனிநியதி தருமறையே !

150

கடுகளவா னாலும்மது
கற்பாறைக்கு ளிருந்திடினும்
நுட்பவறி வுடையநாயன்
நோக்கிடுவா னெனுமறையே !

151
கர்ப்பமுற்றுக் கஷ்டப்பட்டு
கனிந்தபின் பாலூமூட்டி
வளர்த்தாய் தனியோனுக்கும்
வழிபடச்சொல் வான்மறையே !

152
கர்வமது கொண்டுநடை
குரலுந்தாழா நடப்பவர்க்கு
நிச்சயமாய் நாயனவன்
நேசிப்பில்லை யெனுமறையே !

153
அழகை யலங்காரத்தை
அழகுமார்பை அயலார்காணா
மறைத்திடுதல் மங்கையர்க்கு
மாண்பென்ற மாமறையே !

154
முமினான பெண்கள்தலை
முந்தானையால் முக்காடிட்டல்
கண்ணியமும் பிறரின்சீண்டற்
காளாகா ரெனுமறையே !

155
குறைவிலா ஐம்புலனுங்
கொடுத்தஇறை யருட்கொடைக்கு
நரர்கள்செய் நன்றியெல்லாம்
நன்றியன்றோ நவில்மறையே !

156
இறைவசனஞ் செவியுறும்போ(து)
இறைபுகழ்ந்து சிரம்பணிந்து
வணங்கிடுவோ ருறுதியுள்ள
விசுவாசியென் றறைமறையே !

157

நிராகரித்தோர் மறுமைநாளில்
நம்புவது பயனளிக்கா
வேதனைதா மதிப்புமில்லை
வீணரவ ரெனுமறையே!

158

விசுவாசங் கொண்டோர்மீது
வீண்பழிகள் சுமத்துபவர்
இகழ்ச்சியுற்று பாவத்திற்கும்
இலக்காவா ரெனுமறையே!

159

வருங்கால முனருஞ்ஞானம்
வல்லனவ னுக்கேயுண்டு
இன்றேகடை நாளாகலாம்
இனியசெய்யச் சொல்மறையே!

160

அணுவினுஞ் சிறிதெனினும்
அகிலமுழு துள்ளயாவும்
அவனறிவா னதன்பதிவும்
அவனிடமே யறைமறையே!

161

தரும்அருளைத் தடுத்திடவோ
தக்கவைத்தால் தந்திடவோ
ஆற்றலுள்ள அல்லாஹ்வன்றி
ஆருமில்லை யறைமறையே!

162

அருந்துகிற ஆற்றுநீரில்
அலைகடலி னுப்புநீரில்
இனியமீனும் அணியமுத்தும்
இறைகொடையென் றறைமறையே!

163

(இ)ரத்தஉற வுள்ளவரும்
இரண்டறக் கலந்தவரும்
மறுமையில் கைகொடுக்க
மாட்டாரென் றறைமறையே !

164

இறைபணிந்து தொழுகைபேணி
இறையாசி பெற்றவர்கள்
அந்தநாளின் தனிமைக்காக
அவதியுறா ரெனுமறையே !

165

கனவைநன வாக்குதற்குக்
கலங்காநபி "இப்றாஹீமின்"
வலிமைமெச்சி பலிதடுத்த
வல்லோனரு ளறைமறையே !

166

தனையறுத்துப் பலிகொடுக்கத்
தளர்வுறா தனுமதித்த
பாலன்"இஸ் மாயீல்"பண்பைப்
பாரறியச் சொல்மறையே !

167

இறையாணைக் கடிபணியா
"இப்லீஸ்"அவன் கூட்டத்தாரும்
நிச்சயமாய் நரகத்தினுள்
நிரம்பிடுவா ரெனுமறையே !

168

அல்லாஹ்வும் மலக்குகளும்
அண்ணல்மீது ஸலவாத்தோத
சார்ந்தோரும் சலவாத்தோடு
சலாமுங்கூறச் சொல்மறையே !

169

நாயனுடை யிறுதித்தூதாய்
நபிமார்க்கு முத்திரையாய்
வள்ளல்நபி யுள்ளாரென
வலியுறுத்தும் வான்மறையே !

170

தமக்குத்தாம் தீங்கிழைத்தோர்
திருந்திநம்பி இறைகருணை
இறைஞ்சுவோரை மன்னித்திடும்
இறைமஹிமை யறைமறையே !

171

அடையுந்தீங் கெதுவெனினும்
அவரவர்செய் தீவினையே
அதிலுமிகுதி பொறுத்தருளும்
அல்லாஹ்மகிமை யறைமறையே !

172

கழுத்தினுயிர் நரம்பைவிட
கடுகிருக்குங் கருணையாளன்
உதிக்குமனித எண்ணஞ்செயல்
உடனுணர்வா னுரைமறையே !

173

உலகோர்செய் செயல்களையும்
உரைப்பவைக ளெதுவெனினும்
வலமிடமுள் மலக்குகளால்
வரையப்படு மெனுமறையே !

174

மனிதர்ஜின் களுக்களித்த
மாபெரியோ னருட்கொடையில்
பொய்யாக்கிட ஏதுமுண்டோ
புகலச்சொல் புர்கானே !

175

யுகமுடிவு நிகழ்ச்சியிலே
யுக்திசொல யெவருமிலார்
பூகம்பத்தால் மலைகளெல்லாம்
புழுதியாகும் புகல்மறையே !

176

நம்பிக்கை கொண்டவுங்கள்
நாயகிகள் பந்துக்களில்
விரோதிகளு முண்டதனால்
விழிப்புறுக வெனுமறையே !

177

அன்னார்செய் தீங்குகளை
அனுசரித்து மன்னித்திடல்
ஏகனவன் மன்னிப்பிற்கு
ஏதுவாகு மெனுமறையே !

178

சேர்த்திட்ட செல்வமற்றும்
சந்ததியுஞ் சோதனையே
வெற்றியாள ரிறையருளைப்
பெற்றிடுவா ரெனுமறையே !

179

வானமது வெடித்திடலும்
விண்மீன்கள் விழுந்திடவும்
கடல்பொங்கி மரித்தோரெழும்
கடைநாளை யுரைமறையே !

180

ஆத்மாக்க ளொவ்வொன்றும்
அகிலத்தில் செய்தமல்கள்
உலகில்விட்டு வந்ததையும்
உணரும்நாள் உரைமறையே !

181

நல்லதுசெய் தனுப்பிருப்பின்
நாடும்நல்ல வாழ்வினையும்
தீதுசெய்தோர் தீய்ந்திடலும்
தீர்க்கமுடிவென் றறைமறையே !

182

ஆதியுகப் பழஞ்சரிதம்
ஆற்றும்வாழ்க்கை வழிமுறையை
வருங்கால அறிவிப்பையும்
வழங்குகின்ற வான்மறையே !

183

வல்லோன் ஒருவனென்றும்
வணங்கப்பட உரியோனவன்
தெண்டனிட்டுப் பாதுகாவல்
தேடச்சொல்லுந் தீன்மறையே !

184

புகழ்பாடித் துவங்கியதும்
புகல்நாடி முடித்ததுவும்
இறைமறைநீ யென்பதனை
இயம்பிட்டா யெம்மறையே !

185

அல்லலுற்ற அகிலத்திற்கு
அருமருந்தா யருளிவந்த
"அல்குர்ஆன்" நீயல்லவோ
அவனிபுகழ் அருமறையே !

186

தொட்டிட்டு விட்டுவிட்டேன்
தொடர்ந்திடத் தகுதியில்லா
குற்றங்குறை பொறுத்தருளக்
கோருகின்றேன் அல்லாஹ்வே !

துஆ

அகிலம் படைத்தவனே
அஹ்மதரைத் தந்தவனே
அருள்மறையை யீந்தளித்த
அன்பாளன் நீ அல்லாஹ்.

கோமான்நபி யவர்களுக்கும்
கொள்கையுள தோழர்கட்கும்
கிளையார்கள் மூமின்கட்கும்
கிருபைசெய் ரஹ்மானே.

அறிந்தும் அறியாமலும்
அடியான்செய் தவறுகளை
மாபெருமுன் கருணையினால்
மன்னித்தருள் அல்லாஹ்வே.

நிலையில்லா இவ்வுலக
நிர்ப்பந்தம் விட்டறுத்து
தாமரைமேல் தண்ணீராகத்
தங்கிடச்செய் அல்லாஹ்வே.

போதுமென வாழ்மனமும்
பூரணமா யுன்னினைவும்
பெருமையிலாப் பொறுமையையும்
பேணிடச்செய் அல்லாஹ்வே.

வஞ்சகமும் சூதுகளும்
நெஞ்சமதில் கொள்ளாமல்
நஞ்செனவே நீக்கிநலங்
கெஞ்சுகிறோம் அல்லாஹ்வே.

நியமமா யுனைத்தொழுது
நிகழ்ந்திட்ட பாவங்களை
மீண்டுஞ்செய்யா உறுதியுடன்
மீளவருள் அல்லாஹ்வே.

உனைநினையா திருந்திடினும்
உணவளித்து உடையுந்தந்து
உய்விக்கு முனைப்புகழ
உணர்வைத்தா அல்லாஹ்வே.

பாரினி லுனைமறந்து
பாவத்தில் மூழ்கிவிட்ட
பல்ஹீனர் எங்களுக்குப்
பக்குவந்தா அல்லாஹ்வே.

வாழ்கின்ற காலமெல்லாம்
வல்லோனே யுனைத்தொழுது
ஈமானோ டிறுதிமூச்சு
எமையகல அருள்வாயே.

நன்றியைக் காட்டிடவே
நாள்தோறுந் "திக்ரு"செய்யும்
நல்லவர்கள் கூட்டமதை
நாடச்செய் அல்லாஹ்வே.

கானலை நீரென்றெண்ணிக்
காலத்தைப் போக்கிவிட்ட
அறிவற்ற எமக்கருள்வாய்
அல்ஹையுல் கைய்யூமே.

"அல்குர்ஆ" ஸறவுரையை
அண்ணலாரின் பொன்மொழியை
அடிபணிந்து பேணுதற்கு
ஆயுளைத்தா அல்லாஹ்வே.

"வஸீலா"வை "ஃபழீலா"வை
வள்ளல்நபி யவர்களுக்கு
வானுலகில் நீவழங்க
வேண்டுகிறோம் அல்லாஹ்வே.

"ஸிராத்துல் முஸ்தகீமை"ச்
சீராய்க் கடப்பதற்கு
தீன்தாரி யாகவெம்மைத்
திருத்தியருள் அல்லாஹ்வே.

உன்"ஸறுஷின்" நிழலில்நிற்க
உரித்தான உன்அடியார்
கூட்டத்தி லெங்களையுங்
கூட்டிவை அல்லாஹ்வே.

"மஹ்ஷரெ"னு மாத்திடலில்
மாண்புமிகு "அமல்நாமா"
வலக்கையில் வாங்குதற்கு
வாகாக்கு அல்லாஹ்வே.

"ஹவ்லுல்கவ் தர்"நீரைக்
கருணைநபி திருக்கரத்தால்
நாங்கள்பெறும் பாக்கியத்தை
நாயனேநீ தந்தருள்வாய்.

தூய்மைமிகு சுவர்க்கத்தில்
தூயவுன் தெரிசனத்தைக்
காண்கின்ற பாக்கியத்தைக்
காருண்யனே நீயருள்வாய்.

உனைநாடிப் பிரார்த்திக்கும்
உன்னடி யானெனக்கும்
கேட்கின்றோ ரனைவருக்குங்
கிருபைசெய் ரஹ்மானே.

ஏங்கியே யிறைஞ்சுகிறோம்
எவனுள்ளா னுனையன்றி
“துஆ”ஏற்குந் தூயவனே
துணைநீயே யாஅல்லாஹ்.

யாரப்பி பில்முஸ்தபா
பல்லிக்ம காஸதனா
வஸ்மஹ்ல னாமாமழா
யாவாசி அல்கரமி.

வஸல்லல்லாஹு வஸல்லம - வபாரக -
அலா கைரிகல்கிஹி - ஸய்யிதினா முஹம்மதின் -
வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன் -
வல்ஹம்து லில்லாஹிரப்பில் ஆலமீன்.

ஸல்லல்லாஹு அலாமுஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம்
ஸல்லல்லாஹு அலாமுஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம்
ஸல்லல்லாஹு அலாமுஹம்மது
யாரப்பிஸல்லி அலைஹிவ ஸல்லிம்

